# ஆண்டவன் அறுபது

-க.பொ.இளம்வழுதி-



# ஆண்டவன் அறியாது



க. பொ. இளம்வழுதி

அலய்கள் பதிப்பகம்
27, ஆனய்க்காரன் தெரு, கடலூர் - 2.

நூல் : **ஆண்டவன் அறுபது** | ஆசிரியர் : க. பொ. இளம்வழுதி | முதல் பதிப்பு ; ஜூன், 1987 | உரிமை : ஆசிரியர்க்கு | வெளியீடு : அலய்கள் பதிப்பகம், 27, ஆனயக்காரன் தெரு, கடலூர் 2 | அச்சு : அலய்கள் வண்ண அச்சகம், கடலூர் - 2, | பக்கம் 52, விலை ரூ. 4.

# நூல் வாசல்

○

சொற்களால் பொருளும், பொருளால் சொற்களும் பொலிவு பெறுவதுண்டு.

○

கலைஞரைப் பற்றிய நூலென்பதால், சாதாரணச் சொற்கள் கூட சக்தியோடு நிற்கின்றன.

○

கவிதைச் சுவையை ஏற்றுவதைவிட கலைஞரைப் பற்றிய செய்திகளைச் சொல்லிவிட வேண்டுமென் பதற்கே முன்னுரிமை கொடுத்திருக்கிறேன்.

○

நமக்கு மறதி அதிகம். நன்றிகூட அதற்கு விதி விலக்கல்ல. இரைச்சல் மலிந்த தமிழகத்தில் என்ன சொன்னாலும் தமிழர்கள் காதில் ஏறுவதில்லை; நெஞ்சில் நிலைப்பதில்லை. எனவேதான் எழுத்தில் சுருக்கமாகச் சொல்லவேண்டியதைக் குறுக்கமாக்கி யுள்ளேன்.

○

இந்த நூலை உருவாக்கி உலவ விடவேண்டு மென்பதில் உணர்வையும், உறுதியையும், உழைப் பையும் காட்டியுள்ள அலய்கள் அச்சக உரிமையாளர் கவிஞர் கோ, மன்றவாணன் நன்றிக்குமட்டுமல்ல நூலின் பங்குக்கும் உரியவர்.

○

என் இலக்கியப் பயணத்திற்கு ஏற்ற வகையில் உதவி வரும் எல்லா நண்பர்களையும் நன்றியோடு நினைத்துக்கொள்கிறேன்.

கடலூர்.
12—5—87

**க. பொ. இளம்வழுதி.**

அரசியல், நாகரிகம், பண்பாடு,

ஒழுக்கம், உழைப்பு உள்ளன்பு ஆகியவற்றுக்கு

வாழ்க்கை இலக்கியமாகத் திகழும்



பண்ணுருட்டி

டாக்டர். கொ. நந்தகோபாலகிருஷ்ணன், எம்.பி.பி,எஸ்.

அவர்களுக்கு இந்நூல்

பாராட்டுப் பட்டயம்

# ஆண்டவன் அறுபது

சங்க இலக்கியங்கள் வரலாற்றுக் குறிப்புகளாகவும் உள்ளன. கவிதை யாரையும் புகழ்வதற்காக ஏற்பட்டதல்ல. தமிழகத்தை ஆண்ட கலைஞர் கருணாநிதி அவர்களின் சாதனைக் குறிப்புகளே ஆண்டவன் அறுபது. இலக்கியங்கள் மிகைப் படுத்தலாம். ஆனால் வரலாறு....?

## வரலாற்று முகம்

1 தொட்டதை எல்லாம் பொன்போல்
துலங்கிடச் செய்யும் அண்ணல்!
வெட்டிவா என்றால், அண்ணன்
வியந்திட வினைகள் ஆற்றும்
கெட்டியாம் இளைய தம்பி
கேடறி யாத நெஞ்சன்
கொட்டிய நிதியாய் வந்தான்,
குவலயம் புகழத் தானே!

## சௌமியன் பணிதொடர

## சாதாரணன் வந்தார்!

2 அண்ணனின் எண்ணம் ஏற்று
அரும்பணி ஆர்வம் துள்ள
எண்ணிலாத் தமிழர் வாழ்த்தை
இதயமாம் மஞ்சம் ஏற்றி
பண்பறி கலைஞர் ஆட்சிப்
பத்திரம் படிக்க வந்தார்
விண்ணினை ஆளும் கோளும்
விருப்புடன் வந்தே பார்த்தான்

3 முடியுடை மன்னர் மூவர்
முழுதாண் டிருந்த மண்ணை
அடியுதை பட்டுக் கொள்கை
ஆக்கமே கண்ட அண்ணல்
பிடியென மக்கள் நல்க
பெரும்பொறுப் பதனை ஏற்றார்!
இடிமழை எனவே மக்கள்
இருகரம் சேர்த்தார்; ஆர்த்தார்!

## வாழ்த்தும்

## வரவேற்பும்

4 முதல்வராய்க் கலைஞர் ஆட்சி
முத்திரை பெறுதல் காண
மதகினை உடைத்தாற் போலே
மக்களோ மக்கள் வெள்ளம்!
முதலிராப் பெண்ணின் மார்பு
முன்னுயர்ந் தடங்கு மாப்போல்
பதற்றமாய் அலைகள் கூட
பார்த்தன எம்பி எம்பி!

5 கலைஞரே வாழ்க! எங்கள்
காவலர் வாழ்க! செய்த
விலையிலாத் தியாகம் தன்னால்
வெற்றியைக் குவித்தோய் வாழ்க!
நிலைபடும் ஆட்சி; உன்னால்
நேர்படும் எங்கள் வாழ்வு;
கலையுறும் நாடு என்றே
களிப்பினால் ஆர்த்தார் மக்கள்!

## மக்கள் மன்றத்தின் மனநிலை

6 அருந்திறல் அறிஞர் அண்ணா
ஆற்றியப் பணியை ஏற்று
பெருந்திரு பெயரில் கொண்ட
பேசரும் புகழின் தோன்றல்!
மருந்தென வந்தார், நாட்டில்
மடிந்துள வறுமை நீக்க!
பொருந்திடும் திட்டம் தீட்டிப்
புதுமைகள் செய்வார் என்றும்!

## சோலை நிழல் எண்ணங்கள்

7 இவரது தொண்டால் நாடு
இனிமிக உயரும் என்றும்
இவரது ஆற்ற லாலே
இன்னலே தீரும் என்றும்
இவரது முயற்சி யாலே
ஏழைகள் உயர்வர் என்றும்
உவந்தனர் மக்கள்! எங்கும்
உரையிதே ஆன தம்மா!

# பாலை மனங்களின்
# பதைப்பு

8 இவரிடம் ஆட்சி தந்தால்
    ஏதினி விளையும் என்றும்
இவரிடம் சட்டம் தந்தால்
    எப்படிக் காப்பார் என்றும்
இவரிடம் பொறுமை இல்லை
    என்பதால் கடினம் என்றும்
இவரிடம் மாறு பட்டோர்
    எண்ணியே கிடந்தார் ஓர்பால்

9 அண்ணலை எதிர்த்தார் உண்டு;
    அண்ணனைப் பழித்தார் உண்டு;
திண்ணமாய் நின்ற அய்யா
    திருப்பணி பகைத்தார் உண்டு;
கண்ணியம் கல்லார் எங்கும்
    கட்டாயம் வாழ்வார் அன்றோ!
புண்ணியன் ஆள வந்தான்
    பொறாதவர் வாழ்த்தும் ஈதே!

## ஆற்றல்
## அறிமுகம்

10 அஞ்சுகம் பெற்ற பிள்ளை
ஆரூரார் கண்ட பிள்ளை
துஞ்சுதல் இன்றி என்றும்
தொண்டனாய் வாழ்ந்த பிள்ளை
அஞ்சுதல் அறியாப் பிள்ளை
ஆற்றலால் உயர்ந்த பிள்ளை
வஞ்சனை இல்லாப் பிள்ளை
வந்தனன் ஆட்சிக் கென்றார்!

11 பெற்றவர் புகழி னாலோ
பேசரும் செல்வத் தாலோ
உற்றவர் ஊக்கத் தாலோ
உயர்விவர் பெற்றார் இல்லை
பற்றுடை தொண்டி னாலும்
பல்கலை திறத்தி னாலும்
நெற்றியில் வியர்வை தேங்க
நீடுழைத் துயர்ந்தார் கண்டீர்!

## வரலாற்று வரிசை

12 இதுவரை முதல்வ ராக
இத்தமிழ் நாட்டை ஆண்டோர்
பொதுவிலே ஈரெட் டாவார்
புகழ்மிகு அண்ணா வோடு.
மதுமொழி கலைஞர், அண்ணா
மறைந்தபின் பொறுப்பை ஏற்றுப்
புதுமைகள் செய்ய லானார்
பொலிவுற தமிழர் நாடே!

## இதயத்தின் வைப்பறை

13 கயல்விழி காதல் பெண்டின்
கல்லறை தாஜ் மகாலை
நயம்படக் கட்டி வைத்த
நாயகன் ஷாஜ கான்போல்
அயலவர் வந்தால் இங்கே
அதிசயம் என்றே பார்க்க
முயன்றிவண் அண்ணா துஞ்சும்
மோகனக் கோவில் கண்டார்!

## முதுநிலவு அன்று
## புதுநிலவு இன்று

14 கறைமனம் கொண்டோர் என்றால்
    கனிவுடன் ஊக்கி னோரை
மறைந்ததும் மறப்பர்; நாமும்
    மன்பதை பார்த்தோம்! அண்ணன்
துறையெலாம் புரிந்த தொண்டு
    துலங்கிட வழிகள் கண்டு
நிறைவுடன் நன்றி செய்தான்
    நிலமிதில் கருணைச் செல்வன்!

## துயரம் மறந்தனர்
## தொழுநோயாளிகள்

15 சேப்பங் கிழங்கைப் போன்ற
    சீரிலா விரல்க ளுக்கும்,
காப்பிலா வீட்டைப் போன்ற
    கலையிலா நாசி கட்கும்
ஆப்பத்தின் விளிம்பைப் போலே
    அங்கத்தைப் பெற்றார் தம்மை
மூப்பினால் தளர்ந்தோர் போலே
    முகம்சுளித்(து) ஒதுக்கப் பட்டார்!

16

தொழுவெனும் நோயைப் பெற்றுத்
தொழுதுமே கிடந்த போது
அழுமென விட்ட இந்த
அருளிலாச் சமுதா யத்தின்
பழுதெனக் கிடந்(து) உழன்று
பரிதவித் திட்டார்! அன்னார்
அழுகையை மாற்ற இல்லம்
அமைத்தவர் கலைஞர் தானே!

17

எத்தனைப் பேரோ ஆண்டார்
எவரிதை எண்ணிப் பார்த்தார்?
எத்தனைப் பிறந்த நாள்கள்?
என்னதான் திட்டம் கண்டார்?
முத்துவேல் மைந்தன் அன்றோ
முனைந்துமே திட்டம் கண்டார்!
அத்திரு மகனை வாழ்த்தி
அங்கைகள் கூப்பி னாரே!

## கருணை
## பிறந்த நாள்

18 எழுபத்தொன்று சூனில் இங்கே
இரந்தவர் ஏற்றம் பெற்றார்!
எழுபத்தொன்று சூனில் தானே
இருப்பிடம் அவர்கள் பெற்றார்!
எழுபத்தொன்று சூனில் அன்னார்
எல்லாமே பெற்றார்! வாழ்வில்
தொழுவெனும் நோயைப் பெற்றுத்
துவண்டவர் நிறைவு பெற்றார்!

## விழிவிளக்கு
## ஏற்றினார்

19 எண்ணெயும் தீர்ந்து நாக்கு
எரிதிரி வரண்டாற் போலே
கண்ணென இருந்தும் காணும்
கண்மணி பழுதாய்ப் போனோர்
கண்ணொளி பெறுதற் காகக்
கலைஞரே திட்டம் கண்டார்!
மண்ணகம் புகழும் தொண்டு
மதிவலார் பிறந்த நாளில்!

20

ஊன்றுகோல் பற்றி, கண்ணில்
ஒளியிலா(து) உழன்று நின்ற
மூன்றுகால் மாந்தர் இன்னல்
முடித்திடும் திட்டம் தன்னைத்
தோன்றலாம் குவளைச் செல்வன்
துவக்கினார் பிறந்த நாளில்!
ஆன்றநற் சான்றோர் எல்லாம்
அவர்பணி வாழ்த்தி னாரே!

21

ஆண்டவன் பேரால் கோவில்
ஆயிரம் கண்ட போதும்
ஈண்டெவர் ஒளிதான் பெற்றார்?
எவரிவண் சான்று சொல்வார்?
ஆண்டவன் பேரால் நாட்டில்
அமைத்த கண்ணொளி முகாமில்
பாண்டுவின் அண்ணன் போன்ற
பலரிவண் ஒளிபெற் றாரே!

## ஐந்தாய் உழைத்தவர்

## ஆறாக தழைத்தார்!

22 முழுநிலா ஓய்வு கொள்ள
முற்றமாய்த் தலை கொடுத்துப்
பழுதிலா இலக்கி யங்கள்
படைத்தவன்; பரிதிச் சின்னம்
தொழுதிடும் கொள்கைக் கோமான்
தோன்றிய நாளாம் சூனில்
பொழுதெலாம் ஓடி ஓய்ந்தோர்
புன்மைதீர் திட்டம் கண்டார்!

23 பரியுடன் போட்டி இட்டே
பலரிவண் ஆளை ஏற்றி
எரிபசி தீர்க்க வேண்டி
இழுத்தனர் வண்டி ஓ! ஓ!
உரிமைகள் ஒன்றே என்றே
உரைசெயும் நாட்டில் இந்தப்
பரிவிலா நடப்பா? என்றே
பதில்வழி கலைஞர் கண்டார்!

## 24

பாரதி எழுப்பிச் சென்ற
பயனுள வினாவுக்(கு) இங்கே
பா'ரதி' காத லிக்கும்
பைந்தமிழ் மன்மதன் தான்
ஊர்அதி காரம் செய்தே
ஓட்டிடும் கைரிக் ஷாவை
பாரதி! பதில்கேள் என்றே
பரிந்துமே ஒழித்தார் கண்டீர்!

## 25

ஆளைஆள் வைத்து இழுத்தல்
அவரவர் பிறந்து வந்த
வேளையே என்று பேசி
வேதனை வளர்த்த தீய
வேளையின் வேலை நீக்கி
விடிவுதான் கண்ட ஆரூர்
காளையாம் கலைஞர் பேரைக்
காசினி போற்றிற் றம்மா!

## ஞானம் மிக்கவர்
## ஊனம் மறந்தனர்

26 திங்களோ ஒரு நாளேனும்
தெளிவுடன் நிறைவாய்த் தோன்றும்
அங்கமே பழுது பட்டோர்
ஆயுளும் பிறைபோல் ஆகி
மங்கியே கிடந்து வாடும்
மனக்குறை போக்க வேண்டி
இங்கவர் ஏற்றம் காண
இயல்வதோர் திட்டம் கண்டார்!

27 நம்பிக்கை ஏதும் இன்றி
நலிந்தவர் ஊன முற்றோர்!
தும்பிக்கை யானை நம்பி
துதித்துமோர் பயனும் இன்றி
வெம்பியே கிடந்த போது
விரைந்துமே துயர் துடைக்க
தம்பியே கையைத் தந்தார்
தமிழினத் தலைவர் இங்கே!

28

கரிமுகக் கடவுள் தொட்டுக்
கணக்கிலா இறைவன் நாட்டில்
பரிபல பூட்டித் தேரில்
பவனியே வந்த நாட்டில்
முறிந்தகை காலைப் பெற்றோர்
மூங்கையர் செவிடர்க் காக
உரிமையோ(டு) உதவி மூன்று
உருளையாம் வண்டி தந்தும்

29

ஒலிதனை வாங்கி ஊட்டும்
உயரிய கருவி தந்தும்
வலிமிகத் தேவை யற்ற
வகைப்படு பதவி தந்தும்
கலிதனைத் தீர்க்க வேண்டிக்
கைவினைப் பயிற்சி தந்தும்
மலிவென ஒதுக்கப் பட்டோர்
மகிழ்ந்திட கலைஞர் செய்தார்!

## பாலை நிலவுக்குச்

## சோலை அமைத்தவர்

30 உடைவாள் ஒடிந்த தென்றே
உறைதனை உடைப்பார் உண்டோ?
குடைப்பிடி முறிந்த(து) என்றே
கொளுத்துவார் துணியை உண்டோ?
இடையிலே கணவன் மாண்டால்
இங்குளப் பெண்கள் இன்பத்
தடையெனும் கைம்மைச் சட்டம்
தயாரெனும் சமூகம் என்னே!

31 காதல்கல் லறைக ளாகக்
கட்டிளம் பெண்கள் இங்கே
ஆதர வற்று வாடும்
அவலமே மாற வேண்டி
மாதவர் கரம் பிடித்து
மணந்துடன் வாழு வோர்க்கே
ஆதவன் கலைஞர் அன்றோ
அன்புடன் நிதி அளித்தார்!

## கல்லுக்கும் ஒரு

## கல்லூரி

32 அடுத்தவர் உண்ட தட்டை
அலம்பியே உண்ணும் ஆட்கள்
தடுத்தனர் கைம்பெண் வாழ்வு
தழைத்திடல் ஆகா தென்றார்!
படுத்தது நீதி என்றே
பகுத்தறி வாளன் வந்து
கொடுத்தனன் பரிசுத் திட்டம்
குனிந்தகோல் நிமிர்ந்த தம்மா!

33 அலைநிகர் வாழ்வில் என்றும்
அழிவிலாச் செல்வம், சிற்பக்
கலையெனும் கருத்தில் தேரார்
கட்டிலில் இருந்த தாலே
சிலையெலாம் கல்லாய் மாறிச்
சீரழிந் திட்ட வேளை
கலைநிலாக் கலைஞர் வந்தார்;
கல்முகம் மலர்ந் தம்மா!

## காவிரிப் நகரம்

34 பல்லவர், சோழர் ஆட்சி
பரிவுடன் போற்றி வந்த
நல்லதோர் கலையை மீண்டும்
நாட்டினில் வளர்க்க வேண்டி
வல்லவர் தலைமை ஏற்க
வளர்கலைக் கூடத் தோடு
எல்லுமிழ் மணற் பரப்பில்
எழுந்த புகாரைப் பெற்றோம்!

35 எழுத்திலே சிலம்புச் செல்வன்
எழிலுடை நகரைக் கண்டே
அழுத்தமாய் உணர்வு தள்ள
ஆர்வுடன் புகார் படைத்தார்!
இழுத்தவர் பக்கம் ஓடும்
இழிந்தவர் 'புகாரைத்' தந்தார்
பழுத்தநம் 'அய்யா' பிள்ளை
பணி, புகார் நகரே பேசும்!

## கோழைகளின் நாண ஒரு

## கோட்டை

36 வாளினைத் தொட்டோர் எல்லாம்
வல்லவர் ஆன தில்லை
வாளினைப் பெற்றோர் எல்லாம்
வாழ்த்தினைப் பெற்ற தில்லை
வாளினைத் தொட்டோர் எல்லாம்
வஞ்சனை விட்ட தில்லை
வாளினைத் தொட்ட பொம்மன்
வைரமாய் மின்னு கின்றான்!

37 அன்னவன் ஆண்ட கோட்டை
அழித்தனர் என்ற போதும்
அன்னவன் நினைவுத் தேவை
அறிந்தவர் கலைஞர்! மீண்டும்
தென்னகக் கட்ட பொம்மன்
தீரமே விளங்க வேண்டி
அன்னவன் கோட்டை தன்னை
அழகுற அமைத்தார் கண்டீர்!

38 பொம்மனின் கோட்டை கண்டால்
பொங்கிடும் உணர்வு வெள்ளம்
பொம்மனின் கோட்டை பார்த்தால்
பொசுங்கிடும் கோழை உள்ளம்
பொம்மனின் கோட்டை தன்னைப்
பொலிவுறச் செய்த நம்பி!
செம்மையாய் எதையும் செய்யும்
சிந்தனை யாளன் தம்பி!

## குறள் ஆசான்

## கோயில்

39 படித்தவர் முதல்வ ராகப்
பதவியில் இருந்த துண்டு
படித்தவர் குறளை ஊன்றிப்
பதவியைப் பெற்ற தாலே
படித்திடும் குறளின் ஆசான்
பணியினை விளக்கும் கோட்டம்
இடித்தவர் திறந்து வைக்க
எழுந்தது இவரால் கண்டோம்!

(இடித்தவர் — தி. மு. க. ஆட்சியைக் கலைத்த குடியரசுத் தலைவர்)

## கோட்டம்
## ஒரு நோட்டம்

40 பார்த்தவர் வியந்து நின்றார்;
படித்தவர் புகழ்ந்து சென்றார்;
கூர்த்தநன் மதியின் மாண்பைக்
கோட்டநல் அமைப்பில் கண்டார்!
தேர்த்திரு மிடுக்கும் என்ன?
திருக்குறள் அமைப்பும் என்ன?
நேர்த்தியாய்ப் புலவர் அங்கே
நிறைந்த கம்பீரம் என்னே!

## அயர வைக்கும்
## அமைப்பு

41 அமைப்பிலே புதுமை; காணும்
அளவிலே பெருமை; கண்ணின்
இமைப்பிலே முடிவு காணும்
ஏந்தலின் அருமை; கோட்ட
சமைப்பிலே மிளிரக் கண்டோம்!
சரித்திரம் குறித்துக் கொண்டோம்
நமையெலாம் நிமிரச் செய்த
நற்பணிக் கோட்டத் தாலே!

## படிக்காத மேதையைப்
## பார்க்க ஒருகூடம்

42 பள்ளியை நாடா ருக்குப்
பகலுண(வு) அளித்து, கற்க
பள்ளியைப் பிள்ளை நாட
பாதையைக் கண்ட செம்மல்!
கள்ளிகள் இடையே வாச
மல்லியாய் மிளிர்ந்து, காமக்
கொள்ளியை வென்று வாழ்ந்த
கோபுரம் காம ராசர்!

43 தமிழ்ப்பெரும் தலைவர், காலத்
தவறினால் மாண்டார்! அந்தத்
தமிழ்மகன் பெருமை தோன்ற
தக்கதோர் கோவில் கண்டார்!
உமியென உரியோர் அன்று
ஒதுங்கிய நிலையில், நம்மின்
தமிழினத் தலைவர் அன்றோ
தகுவினை அனைத்தும் செய்தார்

44 தொண்டிலே உயர்ந்து நின்ற
தொழத்தகு காம ராசர்
மண்டிய புகழ் விளங்க
மண்டபம் கண்ட தாரோ?
தண்டியில் உப்பெ டுத்தத்
தலைவனின் நினைவுப் பக்கம்
தொண்டனைத் தொண்டர் சேர்த்தார்
துலங்கிடப் பெயரும் தானே!

## அண்ணலின் சம்பந்தியை
## எண்ணிட எழிலார் இல்லம்

45 அரசியல் மேதை, சேலம்
அளித்தநம் ராசா சிக்கு
முரசொலி மு. க. அன்றோ
முனைந்துமண் டபமும் கண்டார்!
அரசியல் வேற்று மையால்
அடுத்தவர் பெருமை தன்னை
அரசியல் அறிந்த மைந்தன்
அழித்திட முனைந்த தில்லை!

## குச்சுகள் மாறி

## மச்சுகள் ஆயின!

46 குடிசையுள் கோழி போலே
குடித்தனம் செய்யும் ஏழை
அடிமைபோல் வாழு கின்றான்
அவன்நிலை உயர வில்லை!
குடிசையை மாற்றி நல்ல
கோபுர இல்லம் தந்தே
விடிவினை வாழ்வில் சேர்த்த
வித்தகர் ஆண்ட காலம்!

47 வாரியம் குடிசை மாற்ற
வந்தது! வறியோர் வாழ்ந்த
சேரிகள் ஒழிய, மாடி
சேர்ந்தனர்; தாழ்ந்தோர் என்ற
சீரிலா எண்ணம் விட்டுச்
சேரிட நோக்கம் பெற்றார்!
ஆரியம் கண்ட சாதி
ஆணிவேர் ஆடிற் றம்மா!

## கோட்டையில் கொடியை ஏற்ற பாட்டை போட்டவர்

48 நாட்டினை ஆண்டு சென்ற
நாயகர் பலபேர் சென்னைக்
கோட்டையில் கொடியை ஏற்றும்
கொள்கையில் குன்றிப் போனார்!
சேட்டினைச் சுட்டிக் காட்டிக்
கிளர்ந்ததால் கலைஞர் நம்மின்
கோட்டையில் கொடியை ஏற்றும்
கொள்கையில் வெற்றி கண்டார்!

## வழிபாட்டு உரிமைக்கும் வந்தது சட்டம்

49 ஆதி திராவி டர்கள்
ஆலயத் துள்ளே செல்ல
ஆதியில் அண்ணல், அய்யா
அரும்பணி ஆற்றி னார்கள்
ஆதி திராவி டர்க்கும்
அர்ச்சகர் ஆகும் வாய்ப்புச்
சேதியைச் சட்ட மாகச்
செய்தவர் கலைஞர் தானே!

50 எலலாரும் எல்லாம் பெற்றே
இன்புடன் வாழு தற்கும்
இல்லார்பால் பரிவு காட்டி
எத்தனைத் திட்டம் கண்டார்?
பொல்லார்தான் புனைந்து தந்த
பொய்யுரை வென்ற போதும்
வல்லான்யான் என்றே காட்டி
வளர்மகன் ஆற்றல் என்னே!

## ஊழியர் வாழ்த்திட

## உதவிய திட்டங்கள்

51 அரசினர் சாத னைக்கே
அடிப்படை ஊழி யர்கள்
அரசவர் நலனைக் காத்தால்
அவர்மனம் மகிழ்ந்(து) உழைப்பார்
அரசெனும் தேரின் அச்சு
அலுவலர்! அவர்கள் நொந்தால்
அரசினால் ஆக்கம் காணல்
அரிதென அறிந்த மேதை!

52 ஊழியர் நலனுக் காக
உருப்படி யான திட்டம்
வாழிய கலைஞர் என்றே
வாழ்த்திட வழங்கக் கண்டோம்!
ஊழியர் மாண்டால், அன்னார்
உறவுகள் வாழ வேண்டி
ஆழியின் முத்து மைந்தர்
ஆயிரம் பத்து தந்தார்!

## பிற்பட்டோர் நலனுக்காகப் பிறந்தது துறையும்-தொண்டும்

53 வேதமாம் மாயை தன்னால்
விழிப்புணர்(வு) அதனை மாய்க்க
சாதக மாகத் தீயர்
சாதியைப் படைத்திட் டார்கள்
ஏதமி லாதோர் அந்த
இழிவினை ஏற்ற தாலே
ஆதர(வு) அற்றோர் ஆனார்
அந்தோ! பின் தங்கிப் போனார்!

54

உழைப்பவர் அவர்தான்; நாட்டை
உயர்த்துவோர் அவர்தான்; ஆனால்
பிழைப்பிலே உரிமை விட்டே
பின்னடைந் திட்டார் கண்டு
உழைப்பவர் உயர வேண்டி
ஒதுக்குக பதவி என்றே
மறைமனப் பெரியார் சொன்னார்
மதித்திவர் ஏற்றுச் செய்தார்!

55

பிற்பட்டோர் நலனுக் காகப்
பெரும்பணி செய்ய வேண்டி-
பிற்பட்டோர் நலத்து றையைப்
படைத்தவர் கலைஞர் தானே!
பிற்பட்டோர் பலபேர் இன்று
பெற்றனர் பதவி என்றால்
நற்றிறப் பெரியார் பிள்ளை
நற்பணித் திறத்தால் அன்றோ?

## உடரும்

## உள்ளமும்

56 ஆதி திராவி டர்க்கு
அவரே சம் பந்தி ஆனார்!
ஆதி திராவி டர்க்கு
அவர்குடி இருப்பு தந்தார்!
ஆதி திராவி டர்க்கு
அவர்பல திட்டம் தந்தார்!
ஆதி திராவி டர்கள்
அவர்பணி மறக்க லாமா?

57 கோரிக்கை என்றால் நெஞ்சம்
கொதித்திடா முதல்வர், கேட்டு
வாரிக் கை நிறைய தந்த
வரலாறு முன்னர் கண்டோம்
பாரிக்கைப் பெற்றோர் ஆண்டார்
பலரிவண் நன்மை பெற்றோம்!
மாரிக்கை வறண்ட தென்றால்
மங்கலம் விளைவ தெங்கே?

## நெருக்கடியில்
## உருக்கென நின்றவர்!

58 பாயிரம் பாடி நின்றோர்
பகைத்துமே சென்ற போதும்
ஆயிரம் ஈட்டி வந்தே
அவரெதிர் நின்ற போதும்
மாயிருள் துரோகக் கூட்டம்
மாறியே எதிர்த்த போதும்
கோயிலுள் சிலையைப் போலே
குலைந்திடா திருந்தார் என்னே!

## உவமைக்கும்
## உண்டோ மாற்று?

59 கலைஞரின் தலைமைக்(கு) ஈடாய்க்
காட்டிட ஒருவர் உண்டா?
கலைஞரின் திறத்தின் மிக்கார்
கண்டிட ஒருவர் உண்டா?
கலைஞரின் எழுத்தை வெல்லக்
கற்றவர் ஒருவர் உண்டா?
கலைஞரே முதல்வர், கட்டில்
கைவிட்ட போதும் தானே!

# காத்திருக்கிறது காலம்!

60 கலைஞரே வாழ்க; உம்மைக்
காலமும் வாழ்த்தும்! எங்கள்
கலைஞரே உயர்க; உம்மால்
கலைத்தமிழ் வளர வேண்டும்!
கலைஞரே நீரே பேசும்;
காதெலாம் இனிக்க வேண்டும்
கலைஞரே உம்மைக் காலம்
கட்டாயம் தேடும் ஆள!



# பகுதி 2

## கொடிக்கு நிறம்

1 பெருவிரல் கீறிடப்
பெருகிய குருதியால்
உருப்பெறக் கொடிக்கே
ஒருநிறம் தந்தவர்

## பள்ளியில் சேர...

2 ஐந்தாம் வகுப்பில்சேர
அனுமதி மறுத்தபோது
நொந்திவர் சாவேனென்றார்
நொடியிலே இடமுப்பெற்றார்

## இந்தி எதிர்ப்பு

3 இந்தியை நுழைத்தபோது
எதிர்த்திடும் மாணவர்க்கே
அந்தநாள் குவளைமைந்தன்
அணியதன் தலைவரானார்

## கையேட்டு ஆசிரியர்

4 மாணவப் பருவம்தன்னில்
மாணவர் நடத்தும்ஏடாய்
மாணவ நேசன்கண்டார்
மலர்ந்ததே முரசொலியும்

## களவும் கடமையும்

5 தன்னகப் பொன்பொருளைத்
தயங்கியே திருடிவிற்று
அன்றிவர் பேச்சாளர்க்கே
அளித்துமே கடமைசெய்தார்

## தந்தை மரணம் - மாநாட்டில் உரை

6 மேடையில் இவர்முழங்கி
மீள்கையில் தந்தையாரோ
கோடையில் பைங்கூழாகிக்
குவலயம் தனைத்துறந்தார்!

## மனைவி மூச்சும், கணவர் பேச்சும்

7 அன்பு மனையாள்
ஆவி பிரிந்திடும்
அன்றும் மேடையில்
அந்தோ கடமையே!

## எழுத்துக்குப் பரிசு

8 இச்சையாய் ஆர். வி.கோபால்
ஈரைம்பது கொடுத்தே
நச்சுக் கோப்பையாம்
நாடகம் வாங்கினார்

## பத்திரிகை ஏற்ற முதல் கட்டுரை

9 இளமைப் பலியெனும்
இவர்கட் டுரையைத்
தளபதி அண்ணனின்
தாளிகை ஏற்றது!

## கொள்கைப் பணிக்குக் கொடியவர் பரிசு

10 இயக்கக் கருத்தினை
இவர்சொலப் பொறாஅர்
மயங்கிடப் புதுவையில்
'மடி' என அடித்தனர்

## 'குடியரசு' துணையாசிரியர்

11 அடிமரம் போன்ற அய்யா
அன்றுதான் நடத்திவந்த
குடியர(சு) ஏட்டினாசன்
குழுவிலே அங்கமானார்

## மணநாளன்றும் மறியல்

12 மண்நாள் அன்றும்
மறியல் செய்து
இனமா னத்தால்
இந்தியை எதிர்த்தார்

## தானே நடத்திக்கொண்ட திருமணம்

13 இன்றுபல திருமணங்கள்
இனிதிவர் தலைமையில்
அன்றுதன் திருமணத்திற்கு
அவரேதான் தலைவரானார்

## பிரச்சாரக்குழு உறுப்பினர்

14 கொள்கை விளக்கக்
குழுஉறுப் பானவர்
வெள்ளி விளக்காய்
விளங்கினார் பணியில்

## கலைவாணர் கார் வழங்கினார்

15 கலைவா ணர்தான்
காரொன்று அளித்துக்
கலைஞர் மகிழும்
காரியம் செய்தார்

## கலைவாணருக்குச் சிலை

16 பெரியார் கொள்கைப்
பேழை என். எஸ். கே.
சிரிப்பை நினைக்கச்
சிலைஇவர் வைத்தார்

## கவர்னர் ஜெனரலுக்குக் (ராஜாஜி) கருப்புக் கொடி

17 கருப்புக் கொடியைக்
கவர்னர் ஜெனரல்
நெருப்பாய் நினைக்க
நீட்டிக் காட்டினார்!

## கண்ணில் பழுது கட்டாய ஓய்வு

18 மருத்துவ மனையில்
மலர்விழிப் பழுதால்
வருத்தக் கிடந்தார்
வளர்மதி ஆறு!

## டால்மியாபுரம் போராட்டம்

19 சொல்லில் சுவைதான்
சொட்டத் தருபவர்
கல்லக் குடிக்கும்
கண்டார் களமே!

## சிறையில் பரிபாலனம்

20 மத்தியச் சிறையுள்
நித்தியக் கடனுக்கு
ஒத்திகை ஆட்சியும்
ஒன்றிவர் கண்டார்

## சட்டமன்ற உறுப்பினர்

21 குளித்தலைத் தொகுதியைக்
குவளைச் செல்வர்க்கு
அளித்திட வென்றார்
ஐம்பத்து ஏழில்!

## உழவர் உரிமைக்கு ஓர் போராட்டம்

22 நங்க வரத்தில்
நலிந்த உழவர்
இங்கிதம் பெறவே
இவர்போ ராடினார்

## கைத்தறி துணி விற்பனை

23 கைத்தறி நெசவாளர்
கண்பனி துடைத்திட
கைத்தறி துணி சுமந்து
கலைஞரும் விற்கின்றார்

## சீனப்போர் நிதியளிப்பு

24 சீனப்போர் வெற்றிக்காகச்
சென்னையில் தி. மு க வின்
மானப்போர் நிதியளிப்பு
மறுப்பிலாச் சாதனையாம்!

## தஞ்சையில் நிதியளிப்பு

25 தஞ்சை மாநாட தனில்
தண்டிய பொருளில்
விஞ்சிய இருபதா
யிரம்இவர் வழங்கினார்

## அண்ணாவிடம் பந்தய வெற்றி

26 சென்னைமா நகராட்சியைச்
சீர்பெற வென்றுகாட்டி
அண்ணனால் பந்தயமாய் பாராட்டோடு
அணிகணை யாழிபெற்றார்!

## தேர்தலுக்குப் பத்து லட்சம்

27 தேர்தலில் வெற்றிகாண
தேவைதான் நிதியுமென்றே
ஆர்வமாய்ப் பத்துலட்சம்
அறிவித்துத் திரட்டினாரே

## தலைமைப் பொறுப்பு

28 இந்தியைக் கட்டிலேற்ற
எத்தனித்து இருந்தவேளை
செந்தமிழ் நாட்டெதிர்ப்புச்
சேனையின் தலைவரானார்!

## தானே நடத்திக்கொண்ட இடைத்தேர்தல் வெற்றி

29 திருவண்ணா மலைத்தொகுதித்
தேர்தலில் வென்றுகாட்டி
வருமண்ணா ஆட்சிஎன்றே
வரலாற்றை முந்திச்சொன்னார்

## பொறுப்பால் பெற்ற சிறப்பு

30 போராட்டக் குழுத்தலைவர்
பொறுப்பான பணிச்சிறப்பைப்
பாராட்டி வெள்ளிவாளை
பரிசாக அண்ணாதந்தார் !

## உரையாடலுக்கு ஒரு பரிசு

31 பத்தாயிரம் ரூபாயைப்
பரிசென எல்,வி பிரசாத்
கொத்தாக இருவருள்ளம்
குவித்ததோர் வெற்றிக்கீந்தார்

## கலைஞர் இலங்கை வர தடை

32 இலங்கை மண்ணிலே
இவர்கால் படுவதைத்
துலங்கா ஆட்சிதான்
துடித்தே தடுத்தது

## தனிமைச் சிறை

33 பாதுகாப்புச் சட்டத்தால்
பாளையிலே இருதிங்கள்
ஏதுதுணை என்றேங்க
இவர்வைக்கப் பட்டிருந்தார்

## மக்கள் வரவேற்பு

34 விடுவிக்கப் பட்டவரை
வீதிவலம் வரவைத்தே
கெடுதலையார் நெஞ்சத்தில்
கிலியேற்றினார் மக்கள்

## பிராவ்தா பேட்டி

35 பிராவ்தா சோவியத்
பெரும்நா ளேடிது
திராவிடக் கலைஞரைத்
தேடிநேர் கண்டது

## மறக்கமுடியாத பாடல்

36 ''காகித ஓடம்
கடலலை மேலெனும்
சோகந் தழுவிய''
சுடர்ப்பாட்டு எழுதினார்.

## பெற்றோர் நினைவாக

37 பெற்றோர்தம் பேர்விளங்கப்
பெரும்பொருளைத் தந்ததாலே
நற்றாய் சேய் நலவிடுதி
நயந்திவர் அமையச்செய்தார்

## நிதியே பெயரானது

38 பதினொரு லட்சமென்றே
பாராட்டி அறிஞரண்ணா
நிதிநதியாம் கருணாசைதை
நின்றிடும் தொகுதியென்றார்

## பொற்கொல்லர் சார்பில் வெள்ளிக் கேடயம்

39 பூம்புகார்ப் படப்படைப்பால்
பொற்கொல்லர் பழிதுடைத்த
நற்பணி நயந்ததோழர்
நல்கினர் கேடயந்தான்!

## லண்டன் டைம்ஸ் பாராட்டு

40 காகிதப்பூ நாடகத்தைக்
கட்டுரையில் பாராட்டிக்
கோகில லண்டன்டைம்ஸ்
குரல்கொடுத் திட்டதென்னே!

## தேர்தல் காழ்ப்பு

41 ஆட்சியை இழப்பதற்கே
அடாவடித் தனம்புரிந்தோர்
கோட்டூரில் குவளையாரைக்
கொல்லவே குண்டரானார்.

## கடலூரில் காலிகள்

42 கடலூரில் காங்கிரசார்
கலைஞரை அச்சுறுத்தி
இடர்செய்யக் காவலர்கள்
இவருயிர் காக்கவந்தார்.

## சொன்னது நடந்தது

43 சென்னையில் காவலர்கள்
செயல்குறை சுட்டிவிட்டு
இன்னமும் ஆறுநாள்தான்
என்றிவர் எச்சரித்தார்

## ஆசான் விலக அமைச்சர் ஆனார்

44 முரசொலி ஆசர்னென்ற
முத்திரை துறப்பதற்கே
அரசிலே அமைச்சரென்ற
அணிபணித் தகுதிபெற்றார்

## படப்பணி விருது

45 கலைமா மணியெனும்
கனித்தமிழ் விருதினைக்
கலைஞருக்கு அறிஞரே
களிப்புடன் வழங்கினார்

## திரு வி. க. பாலம்

46 அடையாறு எல்பின்ஸ்டன்
அன்றைய பாலம்மாற்றி
விடையாக திரு.வி.க.பேர்
விளங்கிட மாற்றுகண்டார்

## அரசுடைமை ஆரம்பம்

47 பெரும்பணக் காரர்வீட்டுப்
பெட்டியை நிரப்பிவந்த
வரும்படி பேருந்தையே
வழிஅர சுடைமைசெய்தார்.

## சென்ட்ரல் ஸ்டேஷன் மாணவர் கலவரம்

48 மத்திய நிலையத்தில்
மாணவர் முற்றுகை
வித்தகக் கலைஞரே
விரைந்ததைத் தவிர்த்தார்

## 'கவிதை அல்ல' நூல்

49 உணர்ச்சியைத் தொட்டிடும்
ஒப்பில்லாச் சொற்செட்டைக்
கணக்காகத் தொகுத்தளித்தார்
' கவிதையல்ல'' நூலாக !

## பயணத்தில்

50 ஓங்கூரில் உழுவைமோதி
உருண்டிட்ட கார்விபத்தில்
தீங்கெண்ணம் இலாக்கலைஞர்
தேற்றிட உயிர்பிழைத்தார்

## கள்வன் பிடிபட்டான்

51 தொடர்வண்டி செலவின்போது
தொத்தியே உள்ளேவந்த
இடர்விளை கள்வனுந்தான்
இவராலே பிடிபட்டானே !

## குன்றா உறுதி

52 நெருக்கடி நிலைகாலத்தில்
நெஞ்சிலே ஈட்டிபாய்ச்ச
உருக்கென நிமிர்ந்துநின்றே
உளஉரம் காட்டினாரே !

## அவதூறு ஆலாபனை

53 ஊழலே உதிரமாக
உடையவர் விளம்பரத்தால்
ஆழமாய் வடுசெய்தார்கள்
அதையிவர் தாங்கிவென்றார்

## இந்திரா வீழ்ச்சி

54 ஆட்சியைக் கலைத்துவிட்டு
அலைக்கழித் திட்டடெல்லி
ஆட்சியை மாற்றிட்ட
அணியிலே இவரிருந்தார்

## துண்டறிக்கை வழங்கினார்

55 முதல்வராய் ஆண்டவரோ
முண்டாசு கட்டிக்கொண்டு
பதறிட துண்டறிக்கை
பாதையில் நின்றளித்தார்

## வரலாற்று நூல்

56 நெஞ்சுக்கு நீதியென்னும்
நிலைத்ததன் வரலாறாக
அஞ்சுக மைந்தன்தந்தார்
அறிவுலகு ஏற்றத்தானே!

## இலங்கைத் தமிழருக்காக

57 இலங்கைத் தமிழருக்கு
இடர்செய அஞ்சிட
உலகை உலுக்கிடும்
ஊர்வலம் நடத்தினார்

## தேசீய ஒருமைப்பாடு

58 இந்திய ஒருமைபேசும்
இலட்சிய உயர்குழுவில்
இந்திரா முயற்சியாலே
இவரதன் அங்கமானார்

## பதவித் துறவு

59 சிங்களர் கொடுமைகண்டும்
சினங்கொளா ஆட்சியாளர்க்கு
இங்கிவர் எதிர்ப்புக்காட்டி
எம். எல். ஏ. பதவிவிட்டார்

## இருபதே, அறுபதைப் பார்!

60 அறுபதைத் தாண்டியும்
அயராது உழைக்கிறார்
இருபதே உணர்வுகொள்
எழுக, இந் நாளே !